பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 13 சனிக்கிழமை 30.10.2021 கதிர் 222

## கப்பம் பெற்ற மூவர் கைது!

பொலிஸ் அதிகாரிகள் எனத் தெரிவித்து கொழும்பு, கிராண்ட்பாஸ் மோலவத்த பிரதேசத்தில், குடும்பஸ்தர் ஒருவரைக் கடத்திச் சென்று சுமார் 10 லட்சம் ரூபாவைக் கப்பமாகப் பெற்றுக்கொண்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

☞ 2

# அரசில் நம்பிக்கையில்லை; சர்வதேசமே தீர்வைக் கொடு!

## யாழ்ப்பாணத்தில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்




(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் யாழ்ப்பாணம் - கோயில் வீதியில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் அலுவலக முன்றலில் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உலக நாடுகள் தமது பிள்ளைகளை மீட்டுத்தர வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கேட்டுக்கொண்டனர்.

அவர்கள், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும், இந்த அரசில் நம்பிக்கையில்லை, சர்வதேசமே! நமக்கு தீர்வைக் கொடு போன்ற கோஷங்கள் எழுப்பியவாறு கொட்டும் மழையிலும் குடை பிடித்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

☞ 2

## முன்னாள் கல்விப் பணிப்பாளர் செல்வரத்தினம் காலமானார்!



முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும்வடமராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய வலயங்களின் முன்னாள் கல்விப்பணிப்பாளரும் ஜி.ஐ. இசற்றின் முன்னாள் பணிப்பாளருமான வே.தி.செல்வரத்தினம்

☞ 2

## காணாமல்போனோரின் உறவுகளை நேரில் சந்தித்துப் பேச கோட்டா முடிவு

### டக்ளஸின் ஊடகப் பிரிவு தெரிவிப்பு

(இ.கலையமுதன்)

காணாமல்போனோர் விவகாரத்துக்குப் பரிகாரம் காண்பது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, காணாமல் போனோரின் உறவினர்களுடனான சந்திப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரின் ஊடகப்பிரிவு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

☞ 2

## 23 இந்திய மீனவர்களும் யாழ். சிறைக்கு மாற்றம்



(ந.லோகதயாளன்)

பருத்தித்துறை கடற்பரப்புக்குள் கடந்த 14ஆம் திகதி ஊடுருவிய வேளை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களும் இன்று காலை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

☞ 2

## பிரிட்டன் புறப்பட்டார் கோட்டா



பிரிட்டனின் ஸ்கொட்லாந்து - க்லாஸ்கோவில் நடைபெறவுள்ள 'சிஓபி: 26 ஐ.நா. காலநிலை மாற்றம்' தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று புறப்பட்டுள்ளார்.

காலநிலை மாற்றம் மற்றும் அதற்கு முகங்கொடுத்து செயற்படுவதற்காக நாடுகள் திட்டமிடும் வழிமுறைகள்

☞ 2

## ரயில் சேவைகள் மீளவும் ஆரம்பம்

மாகாணங்களுக்கு இடையில் இடைநிறுத்தப்பட்டிருந்த ரயில் சேவையை மீளவும் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மாகாணங்களுக்கு இடையிலான ரயில் சேவை எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

☞ 2

## வவுனியாவில் மேலும் 17 பேருக்குத் தொற்று

### விசேட தேவைக்குட்பட்டோரை பராமரிக்கும் இல்லம் ஒன்றில்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் விசேட தேவைக்குட்பட்டவர்களை பாராமரிக்கும் இல்லம் ஒன்றில் 17 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில்

☞ 2

## யாழ். பல்கலைக்கழகத்தில் 6 பேர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு

### மருத்துவ பீடம்





### கலைப் பீடம்





யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 6 சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாக பதவி உயர்த்துவதற்கு பல்கலைக்கழக பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்த கூட்டம் நேற்று துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பேராசிரியர் பதவி உயர்வுக்கு விண்ணப்பித்து மதிப்பீடுகள் மற்றும்

☞ 2

## 23 இந்திய மீனவர்களும் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதான 23 இந்திய மீனவர்களையும் காரைநகர் இடைத்தங்கல் முகாமில் தங்க வைத்த கடற்படையினர் அவர்களின் விவரங்களை மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் கையளித்தனர். அவற்றைக் கையேற்ற திணைக்களத்தினர் அந்த விவரங்களை பருத்தித்துறை நீதிமன்றில் சமர்ப்பித்து அவர்களை விளக்கமறியலில் காரை நகர் இடைத்தங்கல் முகாமிலேயே தடுத்து வைத்திருக்க நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றனர்.

இந்த வழக்கு மீண்டும் 28ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது 23 இந்திய மீனவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு வட்ஸப் காணொலி மூலம் அனைவரும் நீதிவானுக்குக் காண்பிக்கப்பட்டனர். இதனையடுத்து 23 இந்திய மீனவர்களையும் நவம்பர் 11 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவுக்கமைய 23 இந்திய மீனவர்களையும் காரைநகர் இடைத் தங்கல் முகாமில் இருந்து பொறுப்பேற்ற கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் அவர்களை யாழ்ப்பாணம் சிறைச்சாலை நிர்வாகத்திடம் கையளித்தனர்.

இதேநேரம் குறித்த 23 இந்திய மீனவர்களையும் நீதிமன்ற அனுமதியுடன் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் நேற்று சென்று பார்வையிட்டனர்.

## வவுனியாவில் மேலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டோர் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில இன்று வெளியாகின.

அதில், விசேட தேவைக்குட்பட்டவர்களை பராமரிக்கும் இல்லம் ஒன்றைச் சேர்ந்த 17 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த இல்லம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப் படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (100)

## யாழ். பல்கலைக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேர்முகத் தேர்வுகளில் தகுதி பெற்ற 6 சிரேஷ்ட விரிவுரையாளர்களின் விவரங்கள் பேரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நடைமுறைகளுக்கமைய அந்தந்த விண்ணப்ப தினங்களில் இருந்து பேராசிரியர்களின் பதவி உயர்வை பேரவை அங்கீகரித்துள்ளது.

அதன்படி, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் இருந்து சத்திர சிகிச்சை துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணருமான வைத்திய கலாநிதி சி. ராஜேந்திரா சத்திர சிகிச்சையில் பேராசிரியராகவும், மருத்துவத்துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி என். சுகந்தன் மருத்துவப் பேராசிரியராகவும், மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் நிபுணருமான வைத்திய கலாநிதி கே. முகுந்தன் மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்கு பேரவை ஒப்புதலளித்துள்ளது.

இவர்களுடன், கலைப்பீடத்தில் இருந்து பீடாதிபதியும் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி கே. சுதாகர், தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி (செல்வி) எஸ். சிவசுப்ரமணியம், பொருளியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.விஜயகுமார் ஆகியோரை முறையே புவியியல், தமிழ், பொருளியல் துறைகளில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்கும் பேரவை ஒப்புதலளித்துள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வரலாற்றில் ஒரே தடவையில் அதிக எண்ணிக்கையான பேராசிரியர் உயர்வு வழங்கப்படுவது இதுவே முதன் முறையாகும்.

## பிரிட்டன் புறப்பட்டார் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாகக் கலந்துரையாடப்படும் ஐ.நா. காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு, நாளை தொடக்கம் நவம்பர் 12 வரை க்லாஸ்கோ நகரில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நவம்பர் 1 மற்றும் 2ஆம் திகதிகள் உலகத் தலைவர்களின் மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

'காலநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டத்தின் தீர்மானமிக்க சந்தர்ப்பங்கள்' எனும் கருப்பொருளில் நடைபெறும் இம்மாநாட்டில் 197 நாடுகளின் அரச தலைவர்கள், அரச பிரதிநிதிகள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் சுமார் 25 ஆயிரம் பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

பிரிட்டனில் நடைபெறும் மாநாடுகளில் இதுவே மிகப் பெரிய மாநாடாகக் கருதப்படுகின்றது.

## ரயில் சேவைகள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய, அலுவலக ரயில்கள் 152 தடவைகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

கண்டி - பெலியத்த - மாத்தறை - காலி - மாஹோ - குருநாகல் - இறம்புக்கணை - புத்தளம் ஆகிய இடங்களில் இருந்து இந்த ரயில்கள் சேவையில் ஈடுபடவுள்ளன - என்றுள்ளது.

## முன்னாள் கல்விப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது 73 ஆவது வயதில் நேற்றிரவு காலமானார்.

வல்வெட்டியைச் சேர்ந்த இவர் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக தனது அரச பணியை ஆரம்பித்து இலங்கை கல்வி நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு உத்தியோகத்தராக உயர்வு பெற்றவர்.

இடர் மிகுந்த காலத்தில் யாழ். குடாநாட்டின் கல்வியை தளர்ந்து விடாமல் பேணியமையில் இவரது பங்கு அளப்பரியது என்று கல்வியாளர் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## காணாமல்போனோரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கும் கடற்றொழில் அமைச்சருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற விசேட சந்திப்பின்போது ஜனாதிபதியால் மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல்போனோரின் விவகாரத்துக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் காணாமல்போனோரின் உறவினர்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டிருந்தனர்.

அதனடிப்படையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கொரோனா பரவல் ஏற்படுத்திய அசாதாரண நிலைமையால் குறித்த சந்திப்புக்கான திகதி தீர்மானிக்கப்படாமல் இருந்தது.

இந்நிலையில், நேற்றைய சந்திப்பில் குறித்த விவகாரம் தொடர்பாக கடற்றொழில் அமைச்சருடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, காணாமல்போனோரின் உறவினர்களின் விவகாரத்தைத் தீர்த்து வைக்கும் வகையிலான கலந்துரையாடல்களுக்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

உறவுகள் காணாமல்போனமையால் ஏற்பட்டுள்ள வாழ்வாதாரப் பிரச்சினைகளைக் கவனத்தில் எடுத்து அவற்றைத் தீர்ப்பதற்கும், தேவையான பரிகாரங்களை வழங்குவதற்கும் தயாராக இருக்கிறேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது.

## அரசில் நம்பிக்கையில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாம் நடத்தும் போராட்டங்களுக்கு புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் இருக்கின்றது என யாழ். மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவி தெரிவித்தார்.

கடத்தப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைப் பெற்றுத் தாருங்கள் எனக் கோரியே தாம் போராட்டங்களை மேற்கொள்கிறோம் எனவும், போராட்டங்கள் நடத்தப்படும்போது புலனாய்வாளர்கள் ஏன் அச்சுறுத்தும் விதமாகச் செயற்படுகின்றார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## கப்பம் பெற்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபர்கள், கடத்தப்பட்டவரது வீட்டின் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி கப்பம் கோரியுள்ளதுடன் இவ்விடயத்தைப் பொலிஸாருக்குத் தெரிவிக்க வேண்டாம் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

அதற்கமைய கடத்தப்பட்டவரின் மனைவியால் தனியார் வங்கியொன்றில் 10 லட்சம் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது.

அதன்பின்னர் கடத்தப்பட்டவர் மாபொல பிரதேசத்தில் கொண்டுவந்து விடப்பட்டுள்ளார். கடத்தப்பட்டவரின் குடும்பத்தாருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதால் அவர்கள் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை. எனினும், நேற்று இவ்விடயம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பற்றுச்சீட்டு, தொலைபேசி இலக்கம் என்பவற்றை வைத்து விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைதுசெய்துள்ளனர்.

## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## எதிலும் பேரினவாத வியாபகம்

'செல்லும் செல்லாதது எல்லாம் செட்டியார் தலை மீது' என்பார்கள். தென்னிலங்கை அரசியலும் அப்படித் தான் போலும். எந்தச் சிக்கலையும் சிறுபான்மை யினருக்கு எதிரான பௌத்த, சிங்களப் பேரினவாத இன வெறியாக மாற்றி, அதில் அரசியல் செய்வதுதான் தென்னிலங்கையின் போக்காகிவிட்டது.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின்நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்குக் கை மாற்றும் ஆட்சித் தலைமையின் தீர்மானத்துக்கு எதிராக ஆளும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கெம்பிக் கொண்டு நிற்கின்றமை தெரிந்ததே.

ஆளும் தரப்புக்குள் அதிகார மைய இழுபறியாக இந்த விடயம் தீவிரம் பெற்றிருக்கின்றது. ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் இந்த இழுபறியில் தங்கள் தரப்பை வலிமைப்படுத்துவதற்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை கையிலெடுத்திருக்கின்றமை வேதனைக்கும் கண்டனத்திற்கும் உரியதாகின்றது.

இது தொடர்பில் நேற்றுக் கொழும்பில் தாங்கள் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் வெளியிட்ட கருத்துக்கள் நோக்கற்பாலானவை. "சர்வதேச கேள்விப்பத்திர நடைமுறைகளுக்கு அமையவே இந்த விடயத்தில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு இருந்தன. சீனா, பாகிஸ்தான் நிறுவனங்கள் எல்லாம் விண்ணப்பித்தும் இருந்தன. ஆனால் விண்ணப்பிக்காத அமெரிக்க நிறுவனத்துக்கு குறுக்கு வழியில் அந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அதனால் நட்பு நாடுகளைத் தேவையின்றி நாம் பகைத்துக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இராஜதந்திர குழப்பங்களும் உருவாகியுள்ளன.

"இத்தகைய செயற்பாடுகள் ஜே.ஆர்., பிரேமதாஸா, சந்திரிகா, ரணில் ஆகியோரின் அரசுகளில் கூட இடம் பெறவில்லை.

"எங்களின் கதாநாயகர்களான தேசிய படைவீரர்களைத் தண்டிக்கத் தவறினால் அல்லது சமஷ்டி ஆட்சியை வழங்க தவறினால் இலங்கை மீது தடை விதிப்போம் என்று அமெரிக்கா எச்சரிக்கின்றது. அந்தத் தரப்பிடம் எமது சக்தி மூலவளத்தின் மூன்றில் ஒரு பகுதியை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை நாமே தேடி இதன் மூலம் கையளிக்கிறோம். அதாவது எமது குடுமியைப் பிடித்து நாமே அமெரிக்காவிடம் கொடுக்கின்றோம். நமது தேசிய போர்ச் சாதனை வீரர்களை நாம் தண்டிக்க மறுப்பதற்காக சமஷ்டி முறைகளுக்கு நாம் இணங்க மறுக்கின்றமைக்காக நமது சக்தி வலுத்துறையை அமெரிக்கா முடக்கி விட்டால் நாட்டின் நிலைமை என்னாகும்?" – என்று அமைச்சர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பியிருக்கிறார்.

"ஓர் எதிரியை அரவணைப்பதற்காக நட்பு நாடுகளை நாம் பகைத்துக் கொள்ளக் கூடாது" – என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு நீதி செய்ய மறுத்து நிற்கின்றது பௌத்த, சிங்களப் பேரினவாதம். யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இழைக்கப்பட்ட குற்றங்கள் மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை நிலை நிறுத்தி, பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்தி, மீளநிகழாமையை உறுதிசெய்து, இழப்பீடுகளை வழங்கும்படி தான் அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகள் இலங்கையை வலியுறுத்தி நிற்கின்றன. அந்த நீதியைச் செய்ய மறுக்கிறது சிங்கள, பௌத்த பேரினவாதம்.

கெரவலப்பிட்டிய மின்நிலையப் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திற்கு கைமாற்றிய நடவடிக்கையை முறியடிப் பதற்கு அதே பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிச் சிந்தனையில் எழுந்த தந்திரத்தைத்தான் தென்னிலங்கை அரசியல் பயன்படுத்துகின்றது.

பௌத்த, சிங்கள தேசத்தில் எல்லாமுமே பேரினவாத வெறி என்ற பூச்சில்தான் கட்டி எழுப்பப்படுகின்றன என்பதற்கு இது ஓர் உதாரணம்.

## இலங்கைக்கு 20 லட்சம் யூரோ வழங்கியது ஐரோப்பிய ஒன்றியம்

தொற்றுநோயை நிர்வகிப்பதற்கான அதன் முயற்சிகளில் இலங்கைக்கு உதவ ஐரோப்பிய ஒன்றியம் மேலும் 20 லட்சம் யூரோ நிதியை வழங்கியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான அலுவலகமான ஈசிஎச்கியு வழங்கும் இந்த மானியம், உலக சுகாதார அமைப்பு மற்றும் இலங்கையில் உள்ள World Vision மூலம் வழங்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த வளங்கள் கொவிட் மற்றும் இலங்கையில் அதன் சமூகப் பொருளாதார விளைவுகளை எதிர்த்துப் போராடுவதற்கான தற்போதைய ஐரோப்பிய ஒன்றிய ஆதரவை நிறைவு செய்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய உதவித்தொகை கொரோன வைரஸ் தொற்றுநோய்க்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் உலகளாவிய பிரதிபலிப்பின் ஒரு பகுதியாகும் என்றும் இது இலங்கையில் உலக சுகாதார அமைப்புடனான தற்போதைய பங்காளித்துவத்தை நிறைவு செய்கிறது என்றும் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் தூதுவர் டெனிஸ் சாய்ப கூறியுள்ளார்.

## சுகாதார தொழிற்சங்கங்கள் நவ. 9 இல் வேலைநிறுத்தம்

சுகாதாரப் பிரிவு தொழிற்சங்கங்கள் எதிர்வரும் 9ஆம் திகதி சுகாதார விடுமுறை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளன.

சம்பள கோரிக்கை உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

குறித்த தொழிற்சங்க நடவடிக்கையில் 16 சுகாதாரப் பிரிவு தொழிற்சங்கங்கள் கலந்து கொள்ளவுள்ளன என அரச தாதியர்கள் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

இதேநேரம், தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வது தங்களது தொழிற்சங்க நடவடிக்கையின் குறிக்கோள் இல்லை என பொது சுகாதார வைத்திய பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் மேலும் 6 மாதங்கள் நீடிப்பு

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் பதவிக்காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த வியாழக்கிழமை நிறைவடையவிருந்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் பதவிக்காலம் எதிர்வரும் ஏப்ரல் 28ஆம் திகதி வரை 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான அதிவிசேட வர்த்தமானி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டுள்ளது.

## சாதாரணம் மற்றும் உயர்தரம் மாணவருக்கான வகுப்புகளை ஆரம்பிக்க கல்வி அமைச்சு முடிவு

சாதாரண தரம் மற்றும் உயர் தரம் பரீட்சைகளுக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான வகுப்புக்களை ஆரம்பிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் வாரத்தில் இருந்து குறித்த வகுப்புக்களை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் பாடசாலைகள் ஆரம்பமாகும் திகதி விரைவில் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் கடைப்பிடிக்கப்ப வேண்டிய சுகாதார வழிகாட்டுதல்கள் சுகாதா சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினா வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு ஏ.வி.ஆர். அறக்கட்டளையால் உபகரணம்



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு ஏ.வி.ஆர். அறக்கட்டளை நிறுவனத்தினரால் 50 ஆயிரம் ரூபா பெறுமதியிலான அலுமாரி ஒன்று நேற்று (வெள்ளிக்கிழமை) நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஊடாக வழங்கப்பட்டது.

ஏ.வி.ஆர். அறக்கட்டளையின் நிர்வாகிகளும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்களுமாகிய லயன் சிவகுமார் மீ லயன் விசாலினி தம்பதிகளிடம் நோயாளர் நலன்புரிச் சங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைய நேற்று தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு வருகைதந்த பயிற்சி மருத்துவர்களின் விடுதிப் பாவனைக்காகவே இந்த அலுமாரி வழங்கப்பட்டது.

இந்த கையளிக்கும் நிகழ்வில் ஏ.வி.ஆர். அறக்கட்டளை ஸ்தாபகர்களாகிய லயன் சிவகுமார் – லயன் விசாலினி தம்பதிகளிடம் இருந்து வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் திலீபன், நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளர் லயன் சி.ஹரிகரன், முன்னாள் தாதிய பரிபாலகர் சோ.இராசேந்திரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

# அமெரிக்கப் படைகள் தாய்வானில் பயிற்சி



அமெரிக்க படை வீரர்கள் தாய்வானில் பயிற்சியில்ஈடுபட்டுள்ளனர் என, தாய்வான் ஜனாதிபதி சாய் இங்க் வென் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் சி.என்.என். ஊடகத்துக்கு அளித்த சிறப்பு செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

தாய்வானில், 2 கோடியே 30 லட்சம் மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், தங்களுக்குத் தகுதியான சுதந்திரத்தை உறுதி செய்யவும் ஒவ்வொரு நாளும் கடினமாக முயற்சித்து வருகிறோம்.

சீனாவிடம் இருந்து வருகிற அச்சுறுத்தல், ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது. நாங்கள் இந்த முயற்சியில் தோற்றுப் போனால், இந்த மதிப்புகளில்நம்பிக்கைஉள்ளவர்கள், அவர்கள் போராட வேண்டியதுமதிப்புக்குரியது தானா என்று சந்தேகிக்கிற நிலை வந்து விடும்.

அமெரிக்க படை வீரர்கள் தாய்வானில் பயிற்சியில்ஈடுபட்டுள்ளனர். அமெரிக்கா எங்களுக்கு அந்த வகையில் பரந்த அளவிலான ஒத்துழைப்பை அளித்து வருகிறது. அதன் நோக்கம், எங்கள் இராணுவ திறனை அதிகரிப்பதுதான்.

தாய்வான் ஜனநாயகத்தின் கலங்கரை விளக்காகும். உலக அளவில் நம்பிக்கையை நிலைநிறுத்துவதற்கு, ஜனநாயக மதிப்பீடுகள் நிலை நிறுத்தப்படுவதற்கு தாய்வான் பாதுகாக்கப்பட வேண்டும் என கூறினார். தாய்வானில் அமெரிக்க படை வீரர்கள் பயிற்சியில் இருக்கிறார்கள் என்பதை முதன்முதலாக ஒப்புக்கொண்டுள்ள தாய்வான் ஜனாதிபதி இவர்தான். அதே நேரத்தில் எவ்வளவு படை வீரர்கள் இருக்கிறார்கள் என்பதை இவர் வெளிப்படையாக கூறவில்லை.

சீனாவுடன் கடந்த 1949ஆம் ஆண்டு நடந்த உள்நாட்டுப் போருக்கு பின்னர், தாய்வான் தனி நாடானது. ஆனால், இதை சீனா ஏற்காமல், தங்களது ஒருங்கிணைந்த பகுதி என்று தொடர்ந்து கூறி வருகிறது. எனினும் தாய்வான், சீனாவின் கட்டுப்பாட்டில் இல்லை. ஜனநாயக முறையிலான அரசாங்கம் தான் அங்கு ஆட்சி அதிகாரத்தில் உள்ளது.

இந்தநிலையில் சீனக் கடற்கரையில் இருந்து சுமார் 200 கி.மீ. தொலைவில் உள்ள தாய்வானை, சீனாவுடன் மீண்டும் இணைப்போம் என்று சீன ஜனாதிபதி கூறியுள்ளார். ஆனால், தாய்வானுக்கு சீனா மூலம் அச்சுறுத்தல் வரும் பட்சத்தில், அமெரிக்கா எப்போதும் துணை நிற்கும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்

Personal English Classes
K Ganesh (BA.Pera)
தனியாக அவரவர் தரத்தில் இருந்து மேலே படித்தல் வகுப்பில் பேசுதல் தெளிவான கற்பித்தல் Grade 7- GCE OL AL
பட்டதாரிகள் , தொழில்புரிவோர் Spoken Grammar கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்ப்பாணம்



## தய்வானில் ஐந்தரை கோடி போதை மாத்திரைகள் ஆசிய வரலாந்நில் முதன்முநையாக கைப்பந்நப்பட்டன

ஆசிய வரலாற்றில் முதன்முறையாக தாய்லாந்து நாட்டின் லாவோஸ் நகரில் கண்டைனர் லொறியில் பல மில்லியன் டொலர் மதிப்புள்ள ஐந்தரை கோடி போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பல நாடுகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தாய்லாந்து, மலேசியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில் பல கோடி மதிப்பிலான போதைப்பொருள்கள் தற்போது புழங்கி வரும் நிலையில் தாய்லாந்துநாட்டின்தலைநகர்பாங்காக்கில் உள்ள லாவோஸ் நகரில் அந்நாட்டு பொலிஸார் ஆசிய அளவில் மிகப்பெரிய போதைமருந்துகளைகைப்பற்றியுள்ளனர்.

'மெத்'என்றுசுருக்கமாகஅழைக்கப்படும் மெத்தாம்பிடாமைன் என்கிற போதை மாத்திரை மிகவும் பிரபலமானது. மியன்மார், தாய்லாந்து ஆகிய எல்லைகளில் இந்த போதைப்பொருளை கடத்த மிகப்பெரிய கும்பல் செயல்பட்டு வருகிறது. இந்த கும்பலை கைது செய்ய தாய்லாந்து பொலிஸார் பலகாலமாக நிழல் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் லாவோஸ் நகரில் பொலிஸார் சோதனையில் பீர்பாட்டில்களை எடுத்து சென்ற கண்டெய்னர் லொறியில் பல மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள ஐந்தரை கோடி மெத் போதை மாத்திரைகள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தாய்லாந்திலிருந்து இவை இந்தியா, பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட பல தெற்காசிய நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு இடைத்தரகர்களும் உள்ளனர். போதை மாத்திரைகளை பல்வேறு நாட்டு எல்லைகளை தாண்டி கொண்டு சேர்ப்பது, மூன்றாம் நபரிடம் விற்பது உள்ளிட்ட செயல்களுக்கு பாங்காக் நகரை தலைமையிடமாகக் கொண்டு சர்வதேச போதைப்பொருள் கடத்தல் கும்பல் செயல்பட்டு வருகிறது. மலேசியா, பிலிப்பைன்ஸ், கம்போடியா, சிங்கப்பூர் உள்ளிட்ட பல நாடுகளுக்கு இந்த மாத்திரைகள் கடத்தப்படுகின்றன. ஆசிய வரலாற்றில் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் இத்தனை கோடி போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டமை இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. உயர்ரக பார்கள், ரெஸ்டாரன்ட்கள், சுற்றுலாத்தலங்கள் ஆகிய இடங்களில் இந்த மாத்திரைகளை விற்பனை படுஜோராக நடைபெற்று வருகிறது. குறிப்பாக செல்வந்தர்களின் வாரிசுகள் பலர் இவற்றை பயன்படுத்த ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த மாத்திரைகளுடன் 1,500 கிலோ எடை கொண்ட கிரிஸ்டல் வடிவிலான மெத்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இத்தகவலை ஐ.நா., போதைப்பொருள் தடுப்பு பிரிவு தூதர் ஜெரமி டக்லஸ் உறுதி செய்துள்ளார்.

கடந்த ஆண்டு லாவோஸ் நகரில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களைக் காட்டிலும் தற்போது மூன்று மடங்குஅதிகபோதைப்பொருள்கள்கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த போதை மாத்திரைகளை சுமந்து சென்ற லொறி லாவோ பிருவரி என்கிற பீர் தயாரிப்பு நிறுவனத்துக்குச் சொந்தமானது.போதைப்பொருள்கள்கைப்பற்றப்பட்டதற்கும் தங்களது பீர் தயாரிப்பு நிறுவனத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்னதாக மியன்மார் நாட்டின் ஷான் பகுதி போதைப் பொருள் கடத்தலின் இதயப் பகுதியாக திகழ்ந்து வந்தது. இங்கிருந்து ஜப்பான், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு போதைப் பொருள்கள் கடத்தப்படும். கடந்த பெப்ரவரி 1 ஆம் தேதிமுதல் மியன்மார் நாட்டில் இராணுவஆட்சிஅமுல்படுத்தப்பட்டது.இதனைத்தொடர்ந்து அங்கு வன்முறை வெறியாட்டங்கள் நடைபெற்று வருவதால் இந்த போதை பொருள்கள் தாய்லாந்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன தெரியவந்துள்ளது.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# கொரோனா பரவும் ஆபத்தினால் தீபாவளியன்று திரையரங்குகளை மூடக் கோரி பொதுநல வழக்கு



தீபாவளி நாளான நவம்பர் 3 மற்றும் 4 ஆகிய திகதிகளில் திரையரங்குகளை மூட உத்தரவிடக் கோரி உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியைச் சேர்ந்த சிவமுருகன் ஆதித்தன் என்பவர் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் இந்தப் பொதுநல வழக்கினைத் தாக்கல் செய்திருக்கிறார். அதில், 'தற்போது தொடர்ச்சியாக திருவிழாக் காலமாக இருப்பதால் கொரோனா நோய்த் தடுப்பு வழிமுறைகளை, பொது மக்கள்தாங்களாகப்பின்பற்றுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

தொடக்கத்தில் கொரோனா நோய்த் தொற்று பரவலை கருத்தில் கொண்டு திரையரங்குகள் 50 சதவீத இருக்கைகளுடன் இயங்க அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் நோய்த்தொற்றுப் பாதிப்பு குறைந்ததன் காரணமாக 100 சதவீத இருக்கைகளுடன் இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஒக்ரோபர் 26 ஆம் திகதி விவரப்படி புதிதாக கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1,090 ஆகும். இது தமிழகம் இன்னும் கொரோ னாவின் பிடியிலிருந்து விடுபடவில்லை என்பதை உணர்த்துவதாக அமைகிறது. இந்த நிலையில் திரையரங்குகள் 100 சதவீத இருக்கைகளுடன் இயங்க அனுமதி வழங்கியுள்ளமையானது, கொரோனா நோய்த் தொற்று பரவல் அதிகரிக்கக் காரணமாக அமையும்.

கோவில் திருவிழாக்கள், குடமுழுக்கு விழாக்கள், சமூகம் சார்ந்த நிகழ்வுகளில் பொதுமக்கள் ஒன்று கூட நவம்பர் 15 ஆம் திகதி வரை கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. திரையரங்கங்கள்100சதவீதஇருக்கைகளுடன் இயங்கும்போது சமூக இடைவெளியை முறையாகப் பின்பற்றுவதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவு. கொரோனா முதல் அலையின்போதே மாஸ்டர் பட வெளியீட்டின்போது கொரோனா நோய்த் தடுப்பு விதிகள் மீறப்பட்டன என 50 க்கும் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

தற்போது தீபாவளியை ஒட்டி அண்ணாத்த, ஜெய்பீம், மாநாடு, எனிமி, வா டீல் போன்ற படங்கள் திரைக்கு வரவுள்ளன. இம்மாதத் தொடக்கத்தில் ருத்ரதாண்டவம் படம் வெளியான போதும் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு வழிமுறைகளை யாரும் பின்பற்றவில்லை. திரையரங்குகள் 100 சதவீத இருக்கைகளுடன் இயங்க அனுமதிப்பது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரி அதிகாரிகளிடம் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆகவே, சினிமாத் திரையரங்குகள், மல்டிபிளக்ஸ் திரையரங்குகள் போன்றவை 100 சதவீத இருக்கைகளுடன் இயங்க அனுமதித்து ஒக்ரோபர் 23 இல் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பை ரத்துச் செய்தும், நவம்பர் 3 மற்றும் 4 ஆகிய திகதிகளில் திரையரங்குகளை மூடவும் உத்தரவிடவேண்டும்' என அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வானிலிருந்து தரை இலக்கைத் தாக்கும் வெடிகுண்டு வெற்றிகரப் பரிசோதனை



இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ.) உள்நாட்டில் உருவாக்கிய தொலைதூர வெடிகுண்டை இந்திய விமானப் படை இன்று வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹைதராபாத்தில் உள்ள டி.ஆர்.டி.ஓ. அமைப்பின் இமாரத் ஆய்வு மையம் உருவாக்கிய இந்த வானிலிருந்து தரை இலக்குகளைத் தாக்கும் தொலைதூர வெடிகுண்டு, இந்திய விமானப் படையின் போர் விமானத்தில் இருந்து வீசி இன்று பரிசோதிக்கப்பட்டது என்றும் இதன் செயல்பாடு பல உணரிகள் மற்றும் ரேடார்கள் மூலம் கண்காணிக்கப்பட்ட நிலையில் அது தரை இலக்கை மிகத் துல்லியமாகத் தாக்கியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெற்றிக்காக, டி.ஆர்.டி.ஓ. மற்றும் விமானப்படைக் குழுவினரை இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டியுள்ளார். இந்தத் தொலைதூர வெடிகுண்டின் வெற்றிகரப் பரிசோதனை, இந்தியாவின் இந்த வகை ஆயுதத் தயாரிப்பில் முக்கியமான மைல்கல்லைக் குறிக்கிறது என டி.ஆர்.டி.ஓ. தலைவர் டாக்டர் ஜி.சதீஷ் ரெட்டி குறிப்பிட்டிருக்கிறார்.



## ஷாருக்கான் மகன் ஆர்யன் கான் பிணையில் விடுதலையானார்

மும்பை சிறையிலிருந்து ஷாருக்கானின் மகன் ஆர்யன் கான் 4 வாரங்களுக்குப்பிறகு பிணையில் வெளியே வந்துள்ளார்.

சொகுசுக் கப்பலில் போதைப்பொருள் பயன்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட ஆர்யன் கான் சார்பில் நீதிமன்றத்தில் பிணை கோரி மனு அளிக்கப்பட்டது. இரண்டு முறை அவரது பிணை மனு நிராகரிக்கப்பட்ட நிலையில், கடந்த வியாழனன்று அவருக்கு மும்பை உயர்நீதிமன்றம் பிணை வழங்கியது. இருப்பினும், அதற்கான ஆவணங்களை உடனே சமர்ப்பிக்காததால் ஆர்யன்கான்சிறையிலிருந்துவெளியேறுவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், இன்று காலை 11 மணியளவில் சிறையிலிருந்து வெளியே வந்த ஆர்யன் கான் அவரது வெள்ளைநிற ரேஞ்ச் ரோவர் காரில் ஏறிச் சென்றார்.

ஆர்யன் கானுக்கு வழங்கப்பட்டுள்ள பிணையில் 14 நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன.

அவற்றில் முக்கியமாக 'மும்பைக்கு வெளியே பயணிக்க வேண்டுமெனில் விசாரணை அதிகாரியிடம் விவரங்களை அளிக்க வேண்டும், கடவுச்சீட்டை சிறப்பு நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும், சாட்சியங்களை கலைக்க முயற்சிக்கக் கூடாது, நீதிமன்றத்தின் அனுமதியின்றி வெளிநாடு செல்லக்கூடாது' போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து ஆர்யன் கான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

## 2ஜி வழக்கில் தவறான தகவல் வழங்கியமைக்காக முன்னாள் தணிக்கை அதிகாரி மன்னிப்பு கோரினார்



2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான ஊழல் வழக்கில் காங்கிரஸ் முன்னாள் எம்.பியான சஞ்சய் நிருபமிடம் முன்னாள் தலைமைக் கணக்குத் தணிக்கை அதிகாரி வினோத் ராய் நிபந்தனையற்ற மன்னிப்பைக் கோரியுள்ளார்.

இந்தியாவில் மன்மோகன் சிங் பிரதமராகப் பதவி வகித்த காலத்தில் 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்ததாக தலைமைக் கணக்குத் தணிக்கை அலுவலகம் அறிக்கை அளித்தது. அதன் தலைமை அதிகாரியாக இருந்த வினோத் ராய், கடந்த 2014 ஆம் ஆண்டு தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போது, ஊழல் தொடர்பான விசாரணையில் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கின் பெயரைச் சேர்க்கக் கூடாதென அப்போதைய காங்கிரஸ் எம்.பி. சஞ்சய் நிருபம் தன்னை நிர்ப்பந்தித்தார் எனக் கூறியிருந்தார்.

இதையடுத்து வினோத் ராய் மீது டெல்லி நீதிமன்றத்தில் சஞ்சய் நிருபம் அவதூறு வழக்கினைத் தொடர்ந்திருந்தார். இந்த வழக்கில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்த வினோத் ராய், தொலைக்காட்சிப் பேட்டியில் தாம் பேசியதில் உண்மையில்லை என்று குறிப்பிட்டு மன்னிப்புக் கோரியுள்ளார். இந்தப் பிரமாணப் பத்திரத்தை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்ட சஞ்சய் நிருபம், தவறான தகவல் அளித்ததற்காக வினோத் ராய் நாட்டு மக்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கோர வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# திருக்கோவிலில் காணி அனுமதிப் பத்திரம் அமைச்சர் சந்திரசேன நேரில் வழங்கினார்





(காரைதீவு நிருபர் சகா)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் 04 கிராமசேவகர் பிரிவில் அரசகாணியில் வசித்துவரும் 11 குடும்பங்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் காணி அமைச்சர் சந்திர சேனவினால் வழங்கி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு எனும் கொள்கைத்திட்டத்தின் கீழ் கிராமத்துக்கு கிராமம் காணி உறுதிப்பத்திரம் வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்ட திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம்04 கிராம சேவகர் பிரிவில் இன்று காணி உறுதி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

'சுபீட்சத்தின் நோக்கு' மற்றும் காணி அமைச்சின் சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளரும் சட்டத்தணியுமான நிலாந்த விஜயசிங்க தலைமையில் அம்பாறை மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் எஸ்.பரமேஸ்வரனின் முயற்சினாலும் காணி உறுதி வழங்கும் இந்த வைபவம் நடைபெற்றது.

மேலும் அநுராதபுரம்,மொனராகலை,கம்பஹா, கேகாலை, புத்தளம் மற்றும் பதுளை,அம்பாறை மாவட்டங்களில் கடந்த சில மாதங்களாகக் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான அரச காணிகளில் பலவருடங்களாக குடியிருப்பவர்களுக்கு இக் காணி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இந் நிகழ்வில் காணி அமைச்சர் சந்திரசேன, வனவிலங்கு மற்றும் வனவளபாதுகாப்பு அமைச்சர் விமலவீர திசாநாயக்க, அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் டி.வீரசிங்க. காணி அமைச்சின் சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளர் நிலாந்த விஜயசிங்க, மாவட்டக் காணிச் சீர்திருந்த ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் பரமேஸ்வரன், திருக்கோவில் பிரதேச செயலாளர்த.கஜேந்திரன், திருக்கோவில்பிரதேசஉதவிப்பிரதேச செயலாளர் க.சதிசேகரன், உதவித் திட் டமிடல் பணிப் பாளர்.எம்.அனோஜா மற்றும் பிரதேச செயலாளர்கள், உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், பொதுமக் கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்)

## கோடாரியால் மாமனார், மாமியாரை வெட்டிப் படுகாயப்படுத்திய மருமகன்

### மீராவோடையில் இன்று சம்பவம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

மாமனாரையும், மாமியாரையும் மருமகன் ஒருவர் கோடாரியால் வெட்டிய சம்பவமொன்று இன்று சனிக் கிழமை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி, மீராவோடை பகுதியிலே இடம்பெற்றுள்ளது.

கணவன், மனைவி இருவருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள தகராறு காரணமாக மனைவியை விட்டு பிரிந்திருந்த கணவன் ஒருவரே வீடு புகுந்து மனைவியின் தந்தைக்கும், தாய்க்கும் இவ்வாறு கோடரியால் வெட்டியுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மருமகனின் தாக்குதலுக்குள்ளான 62 வயதுடைய மாமனார் ஆபத்தான நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், மாமியார் தொடர்ந்தும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இக் கோரத் தாக்குதலை மேற்கொண்ட நபரை கைது செய்ய வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்..


இறைச்சிக் கோழி விற்பனை

புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

077 868 9500


## திருகோணமலையில் 19 வயதுனருக்கான கொரோனா பைஸர் தடுப்பூசி செலுத்தல்

திருகோணமலையில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இன்று முன்னெடுக்கப்படுகின்றது என தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை திருகோணமலை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி கே. விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

அதன்படி, 19 வயது பிரிவினருக்கான கொரோனா பைஸர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, திருகோணமலை பிரதேச சுகாதார பணிமனையில் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1 மணி வரையில் நடைபெறவுள்ளது. கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை சனிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுகிழமைவரை இருநாள்களும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சனசமூக நிலையங்களுக்கு தளபாட உபகரணம் வழங்கல்

*நேற்றைய தினம் மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூகநிலையங்களுக்கான தளபாட உபகரணங்கள் மட்டக்களப்பு மாநகரசபையின் பாதீட்டுக்கு அமைவாக வழங்கி வைக்கப்பட்டன. குறித்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தியாகராஜா சரவணபவன், பிரதி முதல்வர் மற்றும் உறுப்பினர்கள், சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள்மற்றும்மாநகரசபை ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.*

## புதையல் தோண்டிய பத்து பேருக்கு 11ஆம் திகதி வரை விளக்கமறியல்

திருகோணமலை தம்பலாகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய பத்து சந்தேக நபர்களை அடுத்த மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கந்தளாய் நீதிமன்ற நீதிவான் விசானி தேனவது நேற்று உத்தரவிட்டார்.

தம்பலாகாமம்,முள்ளிப்பொத்தானை,குளியாப்பிட்டி, வத்தளை,குருணாகல்,மற்றும் அம்பாந்தோட்டை பகுதியைச் சேர்ந்த 46,48,40,38,41,55,38,54,32,மற்றும்43 வயது உடைய பத்துப் பேரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் தம்பலாகாமம் ஐயனார் தீவு பகுதியில் புதையல் தோண்டிய நிலையில் தம்பலாகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்களை கைது செய்தோம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களிடமிருந்து புதையலை கண்டறிவதற்கான ஸ்கான் இயந்திரம்,மண்வெட்டி,கூடைகள் பிக்காசு இயந்திரங்கள் போன்றவற்றினையும் கைப்பற்றியுள்ளோம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தம்பலாகாமம் பொலிஸார் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.




# ஆப்கானிஸ்தானோடு ஆசீப் அலி அதிரடி

## 3 ஆவது போட்டியிலும் பாகிஸ்தான் அசத்தல்!

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் நேற்றைய சூப்பர் -12 சுற்றுக்கான இரண்டாவது போட்டியில், பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுக்களால் ஆப்கானிஸ்தானை வீழ்த்தியுள்ளது.

குழு 2 இற்கான இந்தப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி எதிர்பார்த்ததற்கு மாறாக முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. பாகிஸ்தான் அணியின் அதிரடிப் பந்துவீச்சை எதிர்கொண்டு 20 ஓவர்கள் நிறைவில் அந்த அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 147 ஓட்டங்களைப் பெற்றது. மொஹமட் நபி மற்றும் குல்பதீன் இருவரும் ஆட்டமிழக்காது தலா 35 ஓட்டங்களையும் நஜிபுல்லா 22 ஓட்டங்களையும் எடுத்தனர். பாகிஸ்தான் அணியின் இமாட் வசிம் 2 விக்கெட்டுக்களையும் ஷயின் ஷா அப்ரிடி, ஹரிஸ் ரவூப், ஹசன் அலி மற்றும் சதாப் கான் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

அடுத்ததாக 148 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. பாபர் அசாம் 51 ஓட்டங்களையும் பகர் சமான் 30 ஓட்டங்களையும் எடுக்க, இக்கட்டான நேரத்தில் களமிறங்கிய ஆசிப் அலி, ஏழே பந்துகளில் நான்கு சிக்ஸர்களை விளாசி ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களை எடுத்து பாகிஸ்தானை இலகுவாக வெற்றிபெற வைத்தார். ஆப்கானிஸ்தான் அணியின் ரஷிட்கான் 2 விக்கெட்டுக்களையும் முஜிபுர் ரஹ்மான், மொஹமட் நபி மற்றும் நவீன் உல் ஹக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக ஆசிப் அலி தெரிவானார்.

சூப்பர் - 12 சுற்றில் விளையாடிய 3 போட்டிகளையும் வென்று 6 புள்ளிகளோடு குழு 2 இல் பாகிஸ்தான் அணி முதலிடம் வகிக்கிறது.

# மேற்கிந்தியத் தீவுகளுக்கு முதல் வெற்றி பங்களாதேஷ் அணிக்கு 3ஆவது தோல்வி!




ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சூப்பர் -12 சுற்றின் நேற்றைய முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி, 3 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணியை வென்றது.

இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 142 ஓட்டங்களை பெற்றது. நிக்கொலஸ் பூரான் ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும் ரொஸ்டன் சேஸ் 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பங்களாதேஷ் அணியின் மஹெதி ஹசன், முஷ்டபிசுர் ரஹ்மான் மற்றும் சொரிபுல் இஸ்லாம் மூவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 143 என்ற வெற்றி இலக்கை நோக்கிக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 139 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிய, மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. லிடொன் தாஸ் 44 ஓட்டங்களையும் மஹமதுல்லா ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் சேர்த்தனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ராம்போல், ஜேஸன் ஹோல்டர், அன்ட்ரே ரஸல், அகீல் ஹொசைன் மற்றும் டுவைன் பிராவோ ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர். இந்தப்போட்டியின் நிக்கொலஸ் பூரான் தெரிவுசெய்யப்பட்டார்.

சூப்பர் - 12 சுற்றில் 3 போட்டிகளில் விளையாடியிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணி, தனது முதலாவது வெற்றியை நேற்றுப் பெற்றதோடு, பங்களாதேஷ் அணி, இந்தச் சுற்றில் தான் விளையாடிய 3 போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மலிங்கவின் சாதனையை முறியடித்த ரஷீட் விரைவாக 100 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அணிகள் விளையாடிய நேற்றைய போட்டியில் பாகிஸ்தான் அணியின் மொஹமட் ஹபீஸின் விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் ரி-20 போட்டிகளில் தனது 100 ஆவது விக்கெட்டை ரஷீட் கான் வீழ்த்தியிருந்தார்.

53ரி-20போட்டிகளில்விளையாடி100 விக்கெட்டுக்களை வீழ்த்திய ரஷீட் கான், குறைந்த போட்டிகளில் விரைவாக 100 விக்கெட்டுக்களை எட்டிய பந்துவீச்சாளர் என்ற சாதனையைத் தனதாக்கியுள்ளார்.

இதற்கு முன்னதாக, இலங்கையின் லசித் மலிங்க 76 போட்டிகளில் 100 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியமையே சாதனையாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக் கால்பந்தாட்ட அணிக்கு இரண்டாவது போட்டியிலும் தோல்வி

ஆசிய கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் (AFC) 23 வயதுக்குக் கீழானோருக்கான ஆசிய கிண்ணத்திற்கான கால்பந்தாட்டத் தொடரின் தகுதி காண் சுற்றில் தனது இரண்டாவது போட்டியிலும் இலங்கையணி தோல்வியடைந்துள்ளது. ஏ குழுவுக்கான தமது இரண்டாவது லீக் போட்டியில் கட்டார் அணியை எதிர்கொண்ட இலங்கையணி, 5-0 என்ற கோல்கள் கணக்கில் தோற்றுப்போனது.

தனது முதல் போட்டியில் ஏமன் அணியோடு வெற்றிபெற்ற கட்டார், தனது முதல் போட்டியில் சிரியாவிடம் தோல்வியடைந்த இலங்கை அணியை வீழ்த்தியிருக்கிறது. இந்த ஆட்டம் வீரர்களின் ஆதிக்கத்திலேயே போட்டி இருந்தது.

கட்டார் அணியின் ஹஷிம் அலி 28 ஆவது மற்றும் 90 ஆவது நிமிடங்களில் பெனால்டி உதை மூலமும், யுசப் அப்துரிசக் 39, நயிப் அல்ஹட்ராமி 54, அஹ்மட் அல்கனேசி 62 ஆவது நிமிடங்களிலும் கோல்களை அடித்திருந்தனர். போட்டியின் நிறைவில் இந்தத் தொடரை நடாத்தும் கட்டார், இலங்கையை 5-0 என இலகுவாக வீழ்த்தி தமது இரண்டாவது வெற்றியைப் பெற்றது.

இலங்கை அணி இந்தத் தொடரில் பங்கேற்கும் இறுதி லீக் போட்டி நாளை ஏமன் அணிக்கு எதிராக

# 60 ஆயிரம் காணி உறுதிப் பத்திரம் வழங்கியமை ஒரு பாரிய வெற்றி

## சந்திரசேன பெருமிதம்




ஒரு லட்சம் காணி உறுதிகள் வழங்கும் இலக்கை அடைய முடியாவிட்டாலும் இதுவரை எம்மால் 60 ஆயிரம் காணி உறுதிகள் வழங்க முடிந்திருப்பது ஒரு பாரிய வெற்றியாகும் என காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின்கீழ் வீட்டுக்கு வீடு காணி உறுதிப்பத்திம் வழங்கி வைக்கும் நிகழ்வு மட்டக்களப்பு களுதாவளை விச்சுக்காலை வீதியில் அமைந்துள்ள குடியிருப்பு வீடொன்றில்நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு உறுதிப்பத்திரங்களை வழங்கி வைத்துவிட்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

‘வருடக்கணக்காக தங்களுக்குப் பெற்றுக் கொள்ள முடியாமலிருந்த காணி உறுதிகள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை இப்பொழுது ஆரம்பித்து அதனை வழங்கி வருகின்றோம்.

எமது நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் உட்பட சகல சமூகத்தவர்களுக்கும் உரிய பிரதேசங்களுக்குச் சென்று நிரந்தர வதிவிடத்தை உறுதி செய்யும் விதமாக அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொடுக்கும்படி காணி அமைச்சை ஜனாதிபதி ஒப்படைத்த பின்பு அறிவுறுத்தியிருந்தார்.

அதற்கமைய திருகோணமலை மாவட்டத்துக்கும் மட்டக்களப்பு மக்களுக்கும் காணி சீர்திருத்த ஆணைக் குழுவின் கீழ் உள்ள காணிகளுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை வழங்கி வருகின்றோம்.

காணி ஆணைக்குழுவின் கீழ் உள்ள காணிகளுக்கும் அவ்வுரிமைகளைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக கிராமத்துக்கு வந்து வீட்டுக்கு வீடு வந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தி வருகின்றோம். இந்த உறுதிப்பத்திரம் வீட்டுக்கு வீடு எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெற்று வருகின்றது. இது முன்னர் கச்சேரியில் வைத்து இடம்பெற்று வந்த ஒரு நடைமுறையாகும் ஆனால் அதனை நாம் கிராமத்துக்கு வந்து மக்களின் காலடியில் வைத்து இந்தச் சேவையை வழங்கி வருகின்றோம்.

சகல கிராமங்களுக்கும் என்னால் வரமுடியாவிட்டாலும் அதனை அடையாளப்படுத்தும் முகமாக அரசியல் அதிகாரங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், அமைப்பாளர்கள் உட்பட அனைவரும் கிராமங்களுக்குச் சென்று இதனைவழங்கிவருகின்றோம்.

சுபீட்சத்தின் நோக்கு நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதி கூறிய விடயம் 2021ஆம் ஆண்டு எமது நாட்டு மக்களுக்கு ஒரு லட்சம் காணி உறுதிகள் வழங்க வேண்டும் என்பதேயாகும். நான் அதனை நடைமுறைப்படுத்தத் தயாராகும்போது எமது காணி ஆணையாளர் நாயகமும் காணி அபிவிருத்தி ஆணைக்குழுவும் தலைவர் அவர்களது ஊழியர் குழாம் ஆகியோர் பணி செய்து வந்த நேரத்தில் கொரோனா வைரஸ் தொற்று மிக வேகமாகப் பரவத் தொடங்கியிருந்தது.

அதனால் எமது நில அளவைத் திணைக்களமும் மாவட்ட செயலகமும் பிரதேச செயலகங்களும் என்று எல்லாமே மூடப்பட்டிருந்தன. அதன் காரணமாக ஒரு லட்சம் காணி உறுதிகள் வழங் கும் இலக்கை அடைய முடியாவிட்டாலும் இதுவரை எம்மால் 60 ஆயிரம் காணி உறுதிகள் வழங்க முடிந்திருப்பது ஒரு பாரிய வெற்றியாகும் என அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# கறுப்புப் பட்டியலில் இணைக்கும் சீனத் தூதரக தீர்மானத்துக்கு இலங்கை மக்கள் வங்கி பதில்!

நீதிமன்ற உத்தரவு மீளப் பெறப்பட்டதன் பின்னர் உரிய கொடுப்பனவை செலுத்த நட வடிக்கை எடுக்கப்படும் என மக்கள் வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கையின் அரச வங்கியான மக்கள் வங்கியை கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் கறுப்பு பட்டியலில் இணைத்துள்ளதாக அறிவித்தது.

இந்த தூதரகத்தின் தீர்மானத்துக்கு பதிலளிக்கும் வகையில் மக்கள் வங்கி விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இரு தரப்பினருக்கு இடையில் நிலவிய உடன்படிக்கையை மீறி, கடன் நாணய கடிதத்துக்கான கொடுப்பனவை செலுத்தாததன் காரணமாக இலங்கையின் மக்கள் வங்கியை கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கியுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 24 மனி நேரத்தில் நயினாதீவில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவு




கடந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் நயினாதீவில் அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா தெரிவித்தார்.

யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று(வெள்ளிக்கிழமை) நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

கடந்த 24 மணி நேரத்தில் யாழ்ப்பாணத்தில் 20 . 6 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதிகூடிய மழைவீழ்ச்சியாக நயினாதீவு பகுதியில் பதிவாகியுள்ளது. எனினும் இதுவரை பாதிப்புகள் தொடர்பான விவரங்கள் எதுவும் யாழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்குக் கிடைக்கவில்லை. – என்றார்.

வங்காள விரிகுடாவின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தின் காரணமாக மழையுடன் கூடிய காலநிலை காணப்படுவதோடு மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது

எனவே பொதுமக்கள் தங்களையும் தங்களது உடைமைகளையும் இந்தக் காலப்பகுதியில் பாதுகாக்க உரிய நடவ டிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

கரையோரப் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 60–65 கிலோமீற்றர் வரை வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் இந்தக் காலப்பகுதியில் கடலானது கொந்தளிப்பாக காணப்படுவதால் குறிப்பாக கரையோரப் பகுதி மக்கள் அவதானத்துடன் இருக்குமாறும் கடற்தொழிலுக்கு செல்வோர் கடலுக்கு செல்வதைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும் இந்தக் காலப்பகுதியில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். சுதுமலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கடந்த 30 வருடங்களாக நீர் தேங்கி நிற்கின்ற பாரிய பிரச்சினை காணப்படு கின்றது குறிப்பாக கொத்தலாவல வடிகால் அமைப்பு சரியாக இயங்காததன் காரணமாக பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.


# கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தில் மரநடுகை நிகழ்வு

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தில் ‘மரம் நடுவோம் சுற்றுச் சூழல் காப்போம்’ எனும் தொனிப்பொருளில் மரநடுகை நிகழ்வு நேற்று(வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

கண்டாவளை பிரதேசத்தின் ஓசோன் செயற்திட்டத்தின்கீழ் கண்டாவளை சிவில் சமூக ஒன்றியத்தினூடாக மரக்கன்றுகள் நடுகை மற்றும் மரக்கன்று வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்த வேலைத்திட்டத்துக்கு அமைவாக கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தில் கண்டாவளை பிரதேச செயலாளர் ரீ. பிருந்தாகரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது நிகழ்வில் மாவட்ட அரசாங்க மேலதிக அரச அதிபர் (காணி) திருலிங்கநாதன், தரும்புரம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி, இராணுவ அதிகாரி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# மன்னார் மாவட்டத்தில் ஒரு லட்சம் காணித் துண்டுகள் வழங்கும் செயற்திட்டத்துக்கான நேர்முகத் தேர்வு ஆரம்பம்



இளம் தொழில் முனைவோருக்கு நாடு முழுவதும் ஒரு லட்சம் காணித் துண்டுகள் வழங்கும் நிகழ்ச்சி திட்டம் அரசால் அறிவிக்கப்பட்ட நிலையில், குறித்த காணி வழங்கும் நிகழ்ச்சி திட்டத்துக்கு மன்னார் மாவட்டத்தில் இருந்து காணிகளை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்த இளைஞர், யுவதிகளுக்கான நேர்முகத் தேர்வு கடந்த வியாழக்கிழமை முதல் இடம்பெற்று வருகிறது. மன்னார் நகர் பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் மன்னார் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் திருமதி கனகாம்பிகை சிவசம்பு தலைமையில் காணி கிளை அதிகாரிகளால் முதல் கட்ட நேர்முகத் தேர்வு இடம்பெற்று வருகின்றது. விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் அடிப்படையில் அவர்கள் மேற்கொள்ள இருக்கும் சுயதொழில் தொடர்பான திட்ட முன்மொழிவு மற்றும் நிதி விவரம் தொடர்பான ஆவணங்கள் குறித்த நேர்முக தேர்வின் போது கோரப்பட்டதுடன் மேலதிக அனுபவங் கள் உட்பட சுய தொழில் முயற்சி தொடர்பான பின்புலங்கள் தொடர்பாகவும் பரிசீலிக்கப்பட்டது.

மேலும் ஒரே தடவையில் பல நூற்றுக் கணக்கான விண்ணப்பதாரிகளை நேர்முகத் தேர்விற்கு ஒரே தடவையில் அழைத்தமையால் நேர்முகத்தேர்வுக்கு சமுகமளித்துள்ள விண்ணப்பதாரிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.10.2021இல் வெளியிடப்பெற்றது.